1972 சனவரி 25]

திரு.ச. சங்குமுத்து தேவர் : எந்தப் பகுதியில் நிறுவப் பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் தொடங்கவே இல்லை என்று சொன்னேன்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : இவ்வளவு நாள் காலதாமதம் ஆனதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதற்கு முக்கிய காரணம் என்று அவர்கள் சொல்லி இருப்பது ' இடா ரிட்ஸ் a pilot project for கிடைப்பது காலதாமதம் ஆகிறது என்பது தான். வேறு காரணம் பற்றி அரசாங்கத்தில் தகவல் இல்லை.

Tamil names for Government buildings

* 54 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether Tamil names are being given to Government buildings situated inside Government Estate, Mount Road, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஒரு விவர அறிக்கை@ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள்

* 55 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் எந்த எந்த துறைமுகங்களை விரிவு படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது?

(இ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) கடலூர்.

(இ) கடற்பாலம் ஒன்று கட்டுவதற்கும், இரண்டு மணல் வாரி பம்புகள் போடுவதற்கும் ரூ. 1,39.24 லட்சம் செலவில் திட்டமிடப் பட்டு, 1964-ம் வருஷம் தொடங்கப்பட்ட வேலைகள் இப்போது முடிவடையும் தருவாயில் உள்ளன.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, கடலூர் துறைமுகத்தை இப்போது வர்த்தக துறைமுகமாக விரிவுபடுத்த ஏதேனும் மத்திய அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா? சேது சமுத்திரம் திட்டத்தின் நிலை எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

@ 102-103-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.